# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 28
விலை ரூபாய் 20.00

தீபம்-28 | வைகாசி இதழ்-2016,
ஆரம்பம் 15 மாசி-2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 222 1022, 026 320 2532


"ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன்". (எசா 61:10)



## மறைமாவட்ட குருமுதல்வரின் ஆசிச் செய்தி

வைகாசி மாதம் என்றாலே 'வணக்க மாதம்' என்பதுதான் எம் அனைவருடைய மனங்களிலும் எழும் சிந்தனையாகும். வணக்க மாதத்தில் கிறிஸ்தவ விசுவாசிகளின் பக்தி முயற்சிகள், சிறப்பாக அன்னை மரியாவின் பேரில் மேற்கொள்ளப்படும் பக்தி முயற்சிகள் பரவலாக இடம்பெறுவதை நாம் அறிவோம். இதன் வழியாக விண்ணக அரசியான அன்னை மரியாவுக்கு விசுவாசமும் அன்பும் நிறைந்த வணக்கத்தை அனைத்துலக கத்தோலிக்க மக்களும் மனமுவந்து அளிக்கின்றனர். "இம்மாதத்தில் இறைவனுடைய இரக்கத்தின் பலாபலன்களை அன்னை மரியாவின் அரியணையில் இருந்து தாராளமாகப் பெற்றுக் கொள்கின்றோம் என்று திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் கூறியிருக்கின்றார்". (Paul Vi: Engyclical on the Month of May, no. 1) 13ம் நூற்றாண்டில் ஆரம்பமான இப்பக்தி முயற்சி 1700 இயேசுசபை துறவிகளால் பிரபல்யம் அடைந்தது. அக்காலத்தில் இருந்து அனைத்துலகிலும் இப் பக்தி முயற்சி பரவியது.

அன்னையின் பரிந்துரையை நாடி இவ்வணக்க மாதத்தில் செய்யப்படும் ஒவ்வொரு பக்தி முயற்சியும் உமது குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாக அமைய வாழ்த்துகின்றோம்.

இம்மாதம் இயேசுக் கிறிஸ்துவின் விண்ணேற்பு, தூய ஆவியானவருடைய வருகை, மூவொரு இறைவனின் பெருவிழா, கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா என்று எமது விசுவாச மறையுண்மைகளில் சிலவற்றை தாங்கி வருகின்றது. இப்பெருவிழாக்களின் கொண்டாட்டங்கள் எமது விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், விசுவாச வாழ்க்கைப் பயணத்தில் முன்னேற்றம் அடையவும் உதவி செய்யும் வண்ணம் அமையத் தேவையான முயற்சிகளை மேற்கொள்வோம்.

இம் மாதம் 07ம் **நாள் எமது ஓய்வுநிலை ஆயர் பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தமது ஆயத்துவ திருநிலைப்பாட்டின் 33வது ஆண்டினை நிறைவு செய்கின்றார்**. அவரை மனமார வாழ்த்தும் அதே வேளை அவருக்காக, அவரின் தற்போதைய பணிக்காக மன்றாடுவோம். **இம் மாதம் 21ம் நாள் எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் தமது குருத்துவ நிலைப்பாட்டின் 30வது ஆண்டினை நிறைவு செய்கின்றார்**. அவரை வாழ்த்துகின்றோம். அவர்தம் பணி சிறக்க, அனைத்து முன்னெடுப்புகளும் இறைவனின் அருட்துணையோடு நிறைவுகாண முழு மறை மாவட்டமாக இணைந்து செபிப்போம்.


அன்னை மரியாவின் பரிந்துரையும், பாசமிகு அரவணைப்பும், நேர்த்தியான வழிகாட்டலும் எம் அனைவருக்கும் நிறைவாகக் கிடைப்பதாக

**அருட்பணி தே.கிங்ஸ்லி றொபட்**
மறைமாவட்ட குரு முதல்வர்,
திருகோணமலை.




## செபிப்போம் வாழ்த்துவோம்

## இரக்கம் ஒரு சொல் அல்ல



இரக்கத்தின் சிறப்பு யூபிலி பற்றி கேள்வி எழுந்தபோது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைப் பெறுத்தவரை, "இரக்கம்" என்பது ஒரு சொல் மட்டும் அல்ல, அதுவே அவரது குணமாக, செயல்களாக வெளிப்படுவதைக் காணலாம் என்று கர்திகால் ஆப்ரில் அவர்கள் எடுத்துரைத்தார்.

## குருத்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலி

**09-04-2016 திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி.வந். கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் அருட்தந்தை பற்றிக் ஸ்பாக்ஸ் றொய்சன் அருட்பொழிவு செய்யப்பட்டுள்ளார்.**



**இவர் 10-04-2016 அன்று தனது தாய்ப் பங்கான தூய குவாடலூப்பே அன்னை திருத்தலத்தில் முதல் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்.**



**அருட்தந்தை பற்றிக் ஸ்பாக்ஸ் றொய்சன் தூய மரியாள் பேராலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாக பணியாற்றுகின்றார்.**

**இவரது பணிவாழ்வு சிறக்க செபிப்போம்.**



## 155வது விண்ணக பிறப்பு
## புனித இயூஜின் டி மெசெனட்
### (21.05.1861 – 2016)

01.08.1782 அன்று புறொவான்சின் தலைநகர் ஏக்ஸ் (Aix-en-Provence) என்னும் சிற்றூரில் சார்ள்ஸ் அன்டோய்ன் டி மெசனட்டுக்கும், மேரி றோஸ் ஜோ ஆன்னிஸ் அவர்கட்கும் பிறந்து 79 வருடங்கள் இம்மண்ணில் ஓர் அரச பிரபுவாக, இளம் கோமகனாக, மாணவனாக, சேவையில் ஆழ்ந்த குருவாக, குரு முதல்வராக, ஆயராக நிறுவுனராக என பல கதாபாத்திரங்களினால் தம் இயல்பான குணத்தோடு திருச்சபையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உரிமைக்கும் குரல் கொடுத்து வாழ்ந்து 21.05.1861 அன்று இவ்வுலகை விட்டுப் பிரிந்தும், இன்று பிரிந்த அல்லது குழம்பிய குடும்பத்தின் பாதுகாவலராக, ஓர் தூயவராக நம் இதயம் கவர்ந்த தூய சார்ள்ஸ் ஜோசப் இயூஜின் டி மெசனட் அடிகளாரது விண்ணக வாழ்வின் 155 வருட நிறைவைத்தான் நாம் இன்றும் நினைவுகூறுகின்றோம்.

திருச்சபையின் வளர்ச்சியில் பலவிதமான வரலாற்று கதைகளை நாம் கேள்விப்பட்டதுண்டு. அதிலும் ஒரு சில தூயவர்களின் முன்மாதிரிகையான வாழ்க்கை திருச்சபையின் உன்னதத்தை மேலும் ஒருபடி உயர்த்தி வலு சேர்த்து விடுவதாக அமைந்துவிடும். திருச்சபையின் புனிதர் பட்டியலில் இடம் பிடித்துள்ள தூய இயூஜின் டி மெசனட்டின் முன்மாதிரிகையான வாழ்க்கை எவ்வாறு அமைந்தது? எவ்வாறு அது திருச்சபைக்கு வலுசேர்த்தது? இவ்வரலாற்று நாயகனின் புரட்சிகரமான வாழ்க்கை எப்படிப்பட்டது? என்பவற்றுக்கான ஒரு சிறு தேடல் தான் இவ் ஆக்கத்தின் உருவாக்கம் என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

**அமலமரித் தியாகிகள் துறவறசபை நிறுவுனர்**

இவர் தான் உலகமெங்கும் பணியாற்றும் அமலமரித்தியாகிகளின் இதயத் துடிப்பு. திருச்சபையின் வரலாற்றில் கடந்த 200 ஆண்டுகளாக (1816-2016) நற்செய்திப் பணியாற்றும் அமலமரித் தியாகிகள் உலகின் 5 கண்டங்களில் சீனா உட்பட 71 நாடுகளில் இன, மத, மொழி, நிற வேறுபாடுகளைத் தாண்டி தம் அளப்பரிய சேவையினால் பல்வேறு முகங்களையுடைய ஏழைகளை இனங் கண்டு தமது தியாக வாழ்வினால் சாதனை படைத்துள்ளனர். குருச்சுவாமி


தொடர்ச்சி 4ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை" (திபா 23:1)

## உங்களோடு பேசுகிறேன்...

அருட்பணி. N.C. அருள்வரதன்

புதிய மாதத்திலே மீண்டும் உங்களோடு பேச ஒரு வாய்ப்பு இந்த மகிழ்வோடு தொடர்கிறேன். எட்டாம் திகதி இயேசுவின் விண்ணேற்பு விழாவும் பதினைந்தாம் திகதி தூய ஆவியானவரின் பெருவிழாவையும் கொண்டாடுகின்றோம். இம் மாதத்திலே ஆன்மீகம் தொடர்பான பல விடயங்களை நாம் நினைவு கூருகின்றோம். குறிப்பாக மூவொருகடவுளின் தினம். இயேசுவின் திருஉடல் திரு இரத்தப் பெருவிழா. அன்னை மரியாள் எலிசபெத் அம்மாளை சந்தித்த தினங்களை நாம் நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றோம்.

மேலும் இம்மாதத்தின் முதலாவது நாள் சர்வதேச ரீதியிலே தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. எனவே தொழில் புரியும் அனைத்துத் தொழிலாளர்களையும் வாழ்த்துவதோடு அவர்களின் வளமான நிலைகளுக் காகவும் வேண்டிநிற்போம்.

இம்மாதம் பதினான்காம் திகதி சர்வதேச அன்னையர் தினம் கொண்டாடப் படுகின்றது. நமக்காக தம்மையே அர்ப்பணித்து வாழ்கின்ற அன்னையரை எவருமே எக்காலத்திலும் மறந்துவிட முடியாது. நமது அன்னையர் மறையலாம் மறையாது வாழலாம், ஆனால் நமது மனங்களை விட்டு அவர்கள் என்றுமே மறைந்து விடமாட்டார்கள். காரணம் அதுவே 'தாயன்பு'. தாய்க்குலம் அனைத்தையும் ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

மேலும் இம்மாதத்திலே உலக தொடர் தினம் கொண்டாடப்படுகின்றது. எங்கு எது நடந்தாலும் நல்லதோ கெட்டதோ, நன்மையோ தீமையோ, ஆக்கமோ அழிவோ, ஏற்றமோ இறக்கமோ எது எங்கு நடந்தாலும் அவைகள் வெளிக் கொணரப்பட ஊடகங்கள் துணை புரிவதை நாம் ஏற்றுக் கொள்வோம். தொடர்ந்தும் இந் நிலைகள் வளங்கள்காண வாழ்த்துவோம்.

இம்மாதத்திலும் இறைபணியாளர்களை நாம் மறந்துவிட முடியாது ஏழாம் நாளிலே நமது ஓய்வு பெற்ற ஆயரும் தற்போது மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராகவும் பணிபுரியும் கலாநிதி. யோசப் கிங்ஸ்லி ஆண்டகை ஆயர் பணிக்காய் தெரிவான நாளை நினைவுகூருகின்றார். இருபத் தோராம் திகதி திருமலை மறைமாநில ஆயர் கலாநிதி. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் தனது குருத்துவ நாளின் 30வது வருடத் தினை நினைவு கூருகின்றார். தொடர்ந்தும் இவர்களின் பணிவாழ்வு இறை ஆசிருடன் வளங்கள்காண இவர்களுக்காக இறைவனிடம் வேண்டிநிற்போம்.

மேலும் இம்மாதத்திலே மறைக்கல்வி நிலையத்தின் சிங்களப் பிரிவிற்கு பொறுப்பாக இருக்கும் அருட்பணி S.R. ஜெயரெட்ணம் அடிகளாரும் தனது குருத்துவ நாளை நினைவுகூர அருட்பணி B. ஜெயபாலன் அ.ம.தி. அடிகளாரும் தனது குருத்துவ நாளை நினைவு கூறுகின்றார்கள். இவர்களின் பணிவாழ்வு இறை ஆசீருடன் தொடர இவர்களுக்காக இறைவனை வேண்டுவோம்.

அத்துடன் அமலமரித் தியாகிகள் மே மாதம் 21ம் திகதி தங்களது பாது காவலரான தூய இயூஜின் டீ மெசனட் திருவிழாவையும் கொண்டாடுகின்றார்கள். அவர்களது பணி வாழ்வும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

இன்றைய அரசியலை நோக்கும்போது மிகவும் பதட்டமான நிலைகளே காணப்படுகின்றன. ஆட்சியைத் தொடர்வது ஆட்சிக்கு முட்டுக் கட்டைபோடும் முரண்பட்ட நிலைகளை தோற்றுவித்து குளறுபடிகளை உருவாக்கி ஆட்சியை சிதறடிக்க முற்படும் பிற்போக்கான சிந்தனைகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

எது எப்படி என்றாலும் நாட்டிலே நல்லவைகள் நடக்கவேண்டும். மக்களின் வாக்குகளினால் ஆட்சி பீடமேறிய ஆட்சியாளர்கள் தங்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதோடு அனைத்து மக்களும் பேதங்களின்றி வேறுபாடுகளின்றி ஒற்றுமையோடும் நீதியோடும் வழிநடத்தப்பட ஆட்சியாளர்கள் தங்களின் ஆட்சி காலத்திலே ஆவனசெய்வார்கள். செய்யவேண்டும் என்று வேண்டுதலோடு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக்கூறி நிற்கின்றேன்.

## குட்டிக் கதை ஒன்று

Fr.N.C...

சைக்கிலோட்டப் போட்டி ஒன்று அங்கே ஒரு சிறப்பான ஓட்டக்காரன். சற்றுத் தலைக்கனம் பிடித்தவன். ' தன்னை வெல்ல எவராலும் முடியாது என்னும் உணர் வோடிருந்தவன். போட்டி ஆரம்பமாகி பலரும் ஓடுகின்றார்கள்.

போட்டி முடிவடையும் நேரமும் நெருங்கி விட்டது. அவனே இம்முறையும் முதலிடத்திலே ஓடிக்கொண்டிருக்கிறான். ஒரு கையைப் பிடித்துக் கொண்டு மறு கையால் அசைத்துக் காட்டிக்கொண்டு ஓடுகிறான்.

திடீரென்று அவனது சைக்கிளின் முன் 'டயர்' கழன்று ஓட அவன் திடீரென்று நிலத்திலே விழுந்து விடுகின்றான். பின்னால் வந்த எல்லோருமே அவனை முந்தி விட்டார்கள்.

போட்டியிலே எந்த இடமும் அவனுக்கு கிடைக்கவில்லை.

நாம் ஒன்று நினைக்கலாம் ஆனால் தெய்வம் நினைப்பதே நடக்குமென்பது உண்மைதானே.

தொடர்ச்சி.........

## மறைமாவட்ட பாதுகாவலர் தூய லொயலா இஞ்ஞாசியார்



அருட்தந்தை. ஆஞ்சலோ பொன்னையா. இ.ச.

**இறைவனோடு இரண்டறக் கலக்கும் (சங்கமமாகும்) இஞ்ஞாசியார்**

சிறிதுகாலம் நோயுற்று ஆடித்திங்கள் 31ம் நாள் 1556ம் ஆண்டில் தனது 65வது வயதிலே இஞ்ஞாசியார் இறைபாதம் எய்தினார். அவர் இறந்த செய்தி காட்டுத் தீயென உரோமை நகரெங்கும் பரவியது. ஒரு தூயவர் இறந்துவிட்டார். எனக் கூறிக்கொண்டு மக்கள் கூட்டம் அவரது திருவுடலுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்த அலை அலையாகத் திரண்டு வந்தனர். அவரது ஆடைகளில் இருந்தும் தலைமுடியிலிருந்தும் நகங்களிலிருந்தும் சிறுதுண்டைப் பிய்த்துப் புனித பண்டமாக வைத்துக்கொள்ள முற்பட்டனர்.

கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது இயேசு சபையினருக்குப் பெருஞ் சிரமமாக இருந்தது. வழித்துணை மாதா ஆலயத்தில் அன்னாரது திருவுடல் இரண்டு நாட்கள் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. உரோமைநகரில் 'இயேசு' 'Jesu'என்று அழைக்கப்படும் இயேசு சபை தலைமைப் பேராலயத்தில் அவரது திருவுடல் நிலையான வாழ்வில் துயில் கொண்டிருக்கின்றது.

இஞ்ஞாசியார் இறந்தபொழுது இருபது நாடுகளில் நூறு இயேசு சபை இல்லங்களும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இயேசுசபையினரும் பணிபுரிந்தனர். 1609ம் ஆண்டு ஆடித்திங்கள் 22ம் நாள் திருத்தந்தை 5ம் சின்னப்பர் இஞ்ஞாசியாருக்கு முத்திப்பேறுபட்டம் அளித்தார். 1622ம் ஆண்டு பங்குனித் திங்கள் 12ம் நாள் திருத்தந்தை 15ம் கிறகோரியார் தூய சவேரியா-ரோடு இஞ்ஞாசியாருக்கும் தூயவர் பட்டம் வழங்கினார். "உலகத்தையே தன்னுள் அடக்கக் கூடிய பெரிய இதயத்தைக் கொண்டவர் இஞ்ஞாசியார்" எனத் திருத்தந்தை கிறகோரியார் புகழாரம் சூட்டினார். திருத்தந்தை 11ம் பத்திநாதர் இஞ்ஞாசியாரைத் தியானத்திற்கும், இராணுவ வீரர்களுக்கும் பாதுகாவலர் எனப் பிரகடனம் செய்தார்.

**அகில உலகளவில் இயேசு சபை**

இன்று ஏறக்குறைய 112 நாடுகளில் சுமார் இருபதாயிரம் இயேசுசபையினர் பணிபுரிகின்றனர். பாரெங்கும் பரந்து சேவை செய்யும் இயேசு சபையினருக்கு 1825 இல்லங்களும் 500க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் சொந்தமானவை. 55 நாடுகளில் சுமார் 430 உயர்நிலைப் பாடசாலைகளும் இயேசு சபையின் பொறுப்பில் உள்ளன. இயேசு சபையினரின் சேவையைப் பாராட்டி 500க்கு மேற்பட்ட தபால் தலைகள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. இன்று நாம் பயன்படுத்தும் நாட்காட்டியை GragorianCalandar உருவாக்கிய பெருமை அருட்தந்தை கிறிஸ்தோப்பா கிளாவிசைச் சேரும்.

1750ம் ஆண்டில் உலகிலிருந்த 130 விண்வெளிக் கோள்களின் ஆராய்ச்சிமையங்களில் 30 மையங்களை இயேசுசபையினர் நடாத்தி வந்துள்ளனர். கலிலேயாவில் இரண்டு இயேசு-சபைத் தோழர்கள் உருவாக்கிய சந்திரனின் வரைபடத்தை 300 ஆண்டுகளுக்குப் பின் அப்பொல்லோ விண்வெளிப் பயணிகள் பயன்படுத்தி உள்ளனர். திருச்சபை இயேசு சபையி-னரின் இறைபணியைப் பெரிதும் பாராட்டி ஐம்பதிற்கும் மேற்பட்டோருக்கு தூயவர் பட்டமும் ஏறக்குறைய முந்நூறு பேருக்கு முத்திப்பேறு பட்டமும் அளித்துள்ளது. இன்று இயேசு சபை திருச்சபையின் மறுமலர்ச்சிக்காகவும் வளர்ச்சிக்காகவும் பெரிதும் உழைத்து வருகின்றது. **"அனைத்தும் இறைவனின் அதி உன்னத மகிமைக்கே"** என்னும் தூய இஞ்ஞாசியாரின் விருதுவாக்கிற்கேற்ப இயேசு சபையினர் இறையியல், ஆன்மீகம், கல்வி, சமுகவியல் போன்ற துறைகளிலும் விசேடவிதமாக அடிமட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களும் மனித நேயத்தோடு தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்று தம்மையே அர்பணித்துப் பணிபுரிகின்றனர்.

### தவறுக்கு வருந்துகின்றோம்



பங்குனி மாத திருமலை தீபத்தில் மட்டக்களப்பில் மறைந்த அருட்தந்தை ஹரல்ட் ஜோண் வெபர்க்குப் பதிலாக அருட்தந்தை ஹேபியர் படம் போடப்பட்டுள்ளது.

### பாசத்தின் தாய்



அன்னையவள் ஈன்றெடுத்த
அன்புக் குழந்தைகள் நாமன்றோ
தத்தித் தவண்டு தாவித்திரியும்
காலம் யாவும் கரம்பற்றி
காத்திருந்தால் அன்னை அவளின்
அரவனைப்பும் அக்களிப்பும் - இன்றும்
வாழ்வில் அர்த்தம் சொல்கிறதே
தேங்கி அழும் வேளைகளில்
தேற்றிடும் வார்த்தைகளும்
தேனாக தித்தித்ததே
அலைமோதி தவித்தபோது
[illegible] ஆறுதலானதே

அன்னையிடம் அவசரத்தில் வந்தாலும்
ஆசையுடன் ஆசிகள்
ஆயிரமே தந்தாள்
நொடிப்பொழுதிலும் பொடிப்பொடியாக
பரிந்துரைக்கின்றாள்
தம் பிள்ளையென மார்போடு
அணைத்து மௌன மொழி பேசியே
நாள்தோறும் வளர்க்கின்றாள் அன்னை
நாம் அன்னையவளுக்கு
விழா எடுத்து வாழ்த்துவோம்

ஆக்கம்: கு.சுபா-பாலையூற்று

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஜெபமாலை மாதம் ஜெயம் தரும் மாதம்

**கலாபூஷணம் புலவர். அரியநாயகம்**

" பெண்களுள் ஆசீர் வதிக்கப்பட்வர் நீரே" என வாழ்த்தப்படும் பேறுபெற்ற அன்னை மரியாவிற்கு ஆண்டவர் அருளிய பேறு மகத்தானது.

சென்மபாவமின்றி பிறந்த இந்த தெய்வத்தாயின் இதயம் உண்மையில் பரிசுத்த ஆவியின் ஆலயமாகத் திகழ்ந்தது. " என் ஆண்டவருடைய தாய் நீரே உம் வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே" என எலிசபேத் அம்மாள் வாழ்த்தியது எவ்வளவு பெரிய உண்மை.

ஆண்டவர் இயேசு அன்னை மரியாவின் வயிற்றில் தாங்கப்பட்ட நாளில் இருந்து தெய்வீக அருள் முற்றிலுமாய் மாதாவை அலங்கரித்தது. இயேசுவின் ஆலயமாய் மாறினார் தேவ அன்னை. எனவே தான் இன்றும் என்றும் மாதாவை செபத்தில் நினைக்கும் பொழுதும் செபமாலையை ஓதும் வேளையிலும் அன்னையுடன் செபிக்கும் வேளைகளிலும் அன்னையின் தெய்வீக அருள் நம்மை புனிதப்படுத்துகின்றது.

அன்னை மரியாளை "வலியவர்களின் வலிமை" என்றும் "போர் அணியில் அச்சம் தரும் உருவம்" என்றும் சொல்லப்படுவது மகத்தான உண்மை.

கி.பி.718 ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டை மூர்கள் என்ற முரட்டுச் சாதியினர் தாக்கி அரசனையும் கொன்றனர். நாட்டு மக்கள் தஞ்சம் தேடி அஸ்துரியா மலையடிவாரம் சென்றனர். பெலாஜியாஸ் எ ன்னும் ஸ்பெயின் நாட்டுத் தளபதி திறமையான மக்களை தேர்ந்தெடுத்து போர்ப்பயிற்சி அளித்ததுடன் அன்னை மரியாளின் மீது நம்பிக்கை வைத்து இறைவேண்டுதலும் செய்தனர். மலையடிவாரத்தில் இருந்த குகையினுள் பயிற்சி எடுத்ததுடன் திறமையான ஆயிரம் போர்வீரர்களை பயிற்சிக்குள்ளாக்கினான். இதனை அறிந்த மூர்கள் பெலாஜியையும் அவனது படையையும் அழிக்கப்புறப்படனர். மூர்கள் குகையின் வாயிலை உடைப்பதற்காக கற்களையும், பாறைகளையும் வீசினர்.

குகையினுள் இருந்த பெல்ஜியசும், அவரின் படையினரும் அன்னையிடம் செபிக்கத் தொடங்கினர். என்ன அதிசயம் எறிந்த கற்களும், வீசிய பாறைகளும் போன வேகத்திலேயே திரும்பி வந்து மூர் வீரர்களையே தாக்கின. கற்கள் திரும்ப வந்து விழுந்த வேகம் கண்டு மூர் வீரர்கள் புறமுதுகிட்டு ஓடத்தொடங்கினர். பலர் இறந்ததுடன், அருகில் ஓடிக்கொண்டிருந்த ரிலா என்ற ஆறு திடீரென பெருக்கெடுத்து பலர் அடிபட்டு அழிந்தனர்.

மரியாளின் மேல் வைத்த நம்பிக்கையில் மன்றாடிய ஆயிரம் பேரின் நம்பிக்கையும் பல்லாயிரக்கணக்கான மூர் முரடர்கள் அழியக் காரணமாயிற்று. மரியாள் தன்னை நம்பினவர்களின் அடைக்கலப் பாறையாகவும் அரணாகவும் விளங்குவாள் என்பது எவ்வளவு உண்மை.

மரியாளின் பக்தியை பரப்புவதில் தங்களையே பலர் அர்ப்பணித்தனர். அவர்களில் மிக முக்கியமானவர் புனித லூயிசு மொன் போர்ட் (1673 - 1761) ஆகும். இவரது போதகப்பணியும், இவர் உருவாக்கிய துறவற சபைகளும், இவர் எழுதிய நூல்களும் மரியாள் பக்தி பரவிட பெரும் துணையாக இருந்தன. குறிப்பாக இவரது "தூய கன்னி மீது உண்மையான பக்தி" எனும் நூல் மிகப்பரவலாகப் படிக்கப்பெற்று அக்காலத்தில் மரியாள் பக்தி வளர்ந்திடப் பெரிதும் துணைபுரிந்தது. இந்நிலையில் திருத்தந்தை 9ம் பத்திநாதர் 1854ல் மரியாளது மாசில்லா உற்பவத்தையும், திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1950ல் மரியாவின் விண்ணேற்பையும் விசுவாச உண்மைகளாக அறிக்கையிட்ட நிகழ்ச்சிகள், கத்தோலிக்க மக்களிடையே மரியாளின் பக்தியை பல மடங்கு வளரச் செய்தன.

பொற்குடத்திற்கு பொட்டு வைத்தது போல் விளங்கியவை மரியாளின் காட்சிகள் 19ம், 20ம் நூற்றாண்டுகளில் இடம் பெற்ற அன்னை மரியாளின் காட்சியனுபவங்கள், இச்சிறப்புக் காலங்களில் பெயர் பெற்ற பாரிஸ் நகர் திருவுருவம், லாசலத், லூர்து பாத்திமா, குவாடலூப்பே, வேளாங்கண்ணி என்னும் காட்சியனுபவங்கள். இக்காட்சி அனுபவங்கள் இயல்பாகவே மக்களது கவனத்தை மரியாள் பால் ஈர்த்ததில் வியப்பில்லை. இக்காட்சி அனுபவங்களில் அன்னை மரியாள் செபமாலை செபிக்கும்படி விடுத்த வேண்டுதலுக்கு ஏற்ப மக்களிடையே செபமாலை பக்தியும் வளர, பரவத் தொடங்கியது. சாதி, மத, இன பேதமின்றி தம்மை அண்டி வந்தவர்க்கெல்லாம் அன்னை மரியாள் அருள் வழங்களைப் பொழிந்து கொண்டே இருக்கின்றாள். தன்னில் நம்பிக்கை கொண்ட மக்களின் குறிப்பறிந்து ஓடோடி வந்து உதவி செய்கின்றாள்.

தொடரும்..........

---

# அவள் ஒரு...



அவள் ஒரு தெய்வம் அல்ல, தெய்வ மகனின் தாய். அவள் ஒறவின் முறையான எலிசபேத் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவளாய் உரத்த குரலில் **"பெண்களுக்குள் ஆசி பெற்றவள் நீரே"** என்றும், **"என் ஆண்டவரின் தாய்"** எனவும் மரியாளைப் போற்றிப் புகழ்ந்தாள் (லூக் 1:43) மனிதப்பிறவியாய் பிறந்த மரியாளுக்கு ஆராதனை செலுத்தவேண்டியது அவசியமில்லை. ஆராதனை இறைவனுக்கு மட்டுமே உரித்தானது. என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவளை நாம் மகிமைப்படுத்த வேண்டியது கட்டாயமாகும்.

கபிரியேல் தூதன் **"அருள் நிறைந்தவளே"** எனப் போற்றிப் புகழ்ந்தவளை நாமும் போற்றிப் புகழ வேண்டும். அவள் போற்றுவதற்குரியவள். திருவிவிலியம் இறைவனின் வார்த்தையை கொண்டுள்ளது. விவிலியத்தை நாம் பக்தி மனப்பான்மையுடன் வணக்கத்துக்குரிய நூலாக பூசித்து வருகிறோம் அல்லவா? திருப்பலி வேளையிலும் அதற்கு தூபம் காட்டி அதை மகிமைப்படுத்துகின்றோம்.

இறைவார்த்தையான கிறிஸ்துவை தாங்கியவள் மரியாள். **" ஆதியில் வாக்கு இருந்தது அந்த வாக்கு கடவுளாய் இருந்தது"** (யோவான் 1:1) அந்த கடவுளாகிய கிறிஸ்து அவள் கருவறையில், அவள் இரத்தஉறவில், அவள் உதரத்தில் மனு உரு எடுத்தவர். அவரைத் தாங்கிய மரியாளைப் போற்றி மகிமைப்படுத்துதல் முற்றிலும் தகும். தெய்வம் மரியாளுக்குள் குடிகொண்டதால் தெய்வீகத்தன்மை உடையவள் மரியாள். உண்மையாகவே மரியாள் ஒரு ஆலயம் என்றும், முட்செடி என்றும், பெட்டகம் என்றும் வர்ணிக்கப்படுகின்றாள். காரணம் முட்செடி எரிவதை மோசே கண்டார். ஆனால் அம் முட்செடி கருகவில்லை. அது போன்றே மரியாள் தூய ஆவியாள் தாய்மை அடைந்தாள். ஆனால் அவள் கன்னிமை கெடவில்லை. **" நான் கணவனை அறியேன்"** என்று கூறுவதிலிருந்து அவள் கணவனை அறியாத கன்னிகை.

உடன்படிக்கைப் பேழையினுள்ளே மன்னா அடங்கிய பாத்திரம், ஆரோனின் கோல், பத்துக்கட்டளை பலகை இருந்தன. இவ்வுடன்படிக்கை பேழையை சுமப்பவர்கள் தங்களை தூய்மைப்படுத்திய குருக்களாக இருந்தனர். (1 குறிப்பேடு 13) தாவீதின் வெற்றிக்கு காரணமாயிருந்தது. அது மட்டுமல்ல புதுமைகளும் நடந்தன. மரியாளும் ஒரு உடன்படிக்கை பெட்டகம் என்றும் வர்ணிக்கலாம். ஏனெனில் அவளுக்குள் இயேசு குடிகொண்டிருந்தார். உடன்படிக்கை பேழை கொண்டு வரும் போது மிகுந்த பயபக்தியுடனும் புகழ்ச்சிப் பாடல்களுடனும் கொண்டு சென்றனர். ஆகவே நாம் மரியாளையும் பக்தி வைராக்கியத்துடன் புகழ்ச்சிப் பாடல்களுடன் போற்றிப் புகழவேண்டும் (லூக் 1:48). இல் மரியாள் தன் பாடலில் **" இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுடையாள்"** எனப் போற்றுவர் எனக்கூறினார்.

**எனவே மரியாள் "இயேசு" என்ற முத்தைப் பெற்ற சிற்பி. போற்றுவோம், புகழ்வோம்.**

*திருமதி. ஆ.சுப்பிரமணியம் - பேராலயம்*

---

*நிஜமான நிகழ்வொன்றுடன்...*

# அருமருந்தான திருவிருந்து



வறுமையில் வாடிய இருவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள். ஒருவர் அல்பிரட் மற்றவர் ஹான்ஸ். அவர்கள் இருவருமே ஓவியம் படிக்க ஆசை கொண்டனர். ஒப்பந்தப்படி ஒருவர் உழைப்பில் மற்றவர் கற்க வேண்டும். பிறகு மற்றவர் துணையுடன் அடுத்தவர் கற்க வேண்டும்.

முதலில் உழைக்க வேண்டிய பொறுப்பு ஹான்ஸ்சுக்கு உரித்தாயிற்று. அல்பிரட்டுக்கு படிக்க சந்தர்ப்பம் வாய்த்தது. தன் நண்பரின் கல்விக்காக ஹான்ஸ் பல ஆண்டுகள் தச்சுப் பட்டறையில் தன்னையே மாய்த்து உழைத்து ஓடாய் தேய்ந்து போனான். படிப்பை முடித்துவிட்டு நாடு திரும்பிய அல்பிரட் தன் நண்பனை நேரிலே சந்தித்தபோது அவனது தியாகம் அர்ப்பணிப்பு கண்டு கலங்கினான். ஹான்சின் கையிலே எத்தனை காயங்கள் ! எத்தனை தழும்புகள், இதவல்லவா தியாகம்.

நட்புக்கும் தியாகத்திற்கும் இலக்கணமாகத் திகழ்ந்த அந்த கடினமாக, உழைத்து உருக்குலைந்த தன் நண்பனின் கரங்களை ஓவியமாக்கினான் அல்பிரட். அதுவே மிக மதிப்புமிக்க ஓவியமானது.

சாதாரண மானிடர்களே இவ்வாறு தியாகத்திற்கும் அர்ப்பணிப்புக்கும் எடுத்துக்காட்டாய் மிளிருகின்ற இவ்வுலகில் இன்றைக்கு 2015ம் ஆண்டுகளுக்கு முன் அன்பே நிறைந்த, அகிலமே போற்றிய இரக்கத்தின் இருப்பிடமாக, பகிர்தலின் முழுமையாக முதன்மையாக விளங்கி தன் உடலையும், இரத்தத்தையும் தந்துவிட்டுச் சென்ற கிறிஸ்து இயேசுவின் தாராள சிந்தை பற்றி நோக்குவோம்.

" உலகம் முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்" (மத் 28:20) என்று சொன்ன தியாகத்தின் திருவுருவை, ஆண்டவரின் உடனிருப்பை, தொடர் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் உயரிய, உன்னத பெருவிழாவாக "ஆண்டவரின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா" தாய்த் திருச்சபையால் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆண்டவரின் திருவுடல், திரு இரத்தம் என்பது நற்கருணை என்பதை நாமறிவோம். இயேசு தனது இரண்டாம் வருகை வரை அதாவது தான் மாட்சியோடு மீண்டும் வரும் வரை கல்வாரிப் பலி எல்லாக் காலங்களிலும் நினைவுகூரப்படவே நற்கருணையில் தம்மையே தரணியில் தந்து விட்டுச் சென்றார்.

கொடுப்பதில் உயர்வான கொடுத்தலைச் செய்தவர் இயேசு. தனக்குள்ளதனைத்தையும், தன்னையும் சாவின் கொடுக்காகிய பாவ அடிமைத்தனத்தில் வீழ்ந்தவர்களுக்காக தாரை வார்த்த தியாகம் திவ்வியமானது, தீர்க்கதரிசனமானது, எல்லா வேறுபாடுகளையும் களைந்தது. ஆன்மீக உணவாகிய நற்கருணை நிலையான வாழ்வைத் தருகின்றது. இதை உண்பவரும், பருகுபவரும் இயேசுவோடு இணைந்திருப்பர். இயேசுவால் வாழ்வர்.

"நாம் **கிறிஸ்துவின்** திருவுடலையும், திரு **இரத்தத்தையும் உட்கொள்வதன் பயன்பாடு எது வென்றால் நாம் உட்கொள்கின்ற பொருளாகவே மாறுகின்றோம்"** என்று திருத்தந்தை முதலாவது லியோ கூறினார். இங்கு உட்கொள்கின்ற பொருள் இயேசுக்கிறிஸ்து. ஒரே பந்தியில் சகோதரத்துவ உணவை உண்டு இயேசுவாக மாறும் நாம் ஒவ்வொருவரும் அடுத்திருப்பவருடன் சகோதர மனப்பான்மையுடன் வாழ அழைக்கப்படுகின்றோம்.

இயேசுவாக மாறுபவர்கள் ஆண்டவர் இயேசு எவ்வாறு இவ்வுலகில் அன்பை, நட்பை, பகிர்வை, மன்னிப்பை, பொறுமையை, இரக்கத்தை வாழ்ந்து காட்டிச் சென்றாரோ அதை செயலில் காட்டி **"இனி வாழ்பவன் நானல்ல, கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்"** என்ற இறைவாக்குக் முன்னுதாரணமாக திகழ வேண்டும்.

தொடர்ச்சி 5ம் பக்கம்....☞

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரல்களின் அதிசயம்

*"செபிக்கத் தெரியாத மனிதன்*
*வாழத் தெரியாதவன்"*

என்ற தூய கிறிஸோஸ்தம் அருளப்பரின் வாக்கிற்கு இணங்க, மனித வாழ்க்கையில் மிகவும் அதிசயமானது, பிரார்த்தனை செய்வது அல்லது செபிப்பது. எம்மைப் படைத்த இறைவனை தொழுதல், அவர் நம் வாழ்வில் செய்யும் சகல நன்மைகளுக்கும் நன்றி செலுத்துதல், நமக்கு வேண்டியோருக்காக செபித்தல் என்பது எமது வாழ்வில் கூடப்பிறந்தது. எப்படி செபிக்கின்றோம், யாருக்காக, எதற்காக செபிக்கின்றோம் என எண்ணிப்பார்த்தல் சுவாரசியமானது.

எமது கலை கலாச்சாரத்தின்படி நாம் அனைவரும் கடவுளை வணங்கும் போது இரு கரங்களையும் கூப்பி வணங்குதல் வழக்கம். இதில் ஒளிந்திருக்கும் இரகசியம் என்ன தெரியுமா? எமது இரு கரங்களையும் கூப்பும்போது எமது ஐந்து விரல்களும் தரும் அர்த்தம் அற்புதமானது.

**பெருவிரல்**

இது, நாம் நமது கரங்களை கூப்பும் போது நமது செஞ்சுக்கரு கிலேயே உள்ளது. இது நாம் செபிக்கும்போது எமது இதயத்தில் முதலிடத்தில் இருப்பவர்களுக்காக, எமது நேசத்திற்கு உரியோருக்காக செபிக்க நினைவுபடுத்துகின்றது. நாம் நேசிப்பவர்களை நினைவுபடுத்துவது மிகவும் இலகுவானது.

**ஆட்காட்டி விரல்**

இது, குறிப்பிட்ட ஆட்களை, பொருளை அல்லது இடத்தை சுட்டிக்காட்டும் விரல். இது நமது ஆசிரியர்களுக்காக, எமக்கு கற்பிப்பவர்களுக்காக, அறிவுரை தருபவர்களுக் காக, எம்மைக் குணப்படுத்துபவர்களுக்காக செபிக்க வேண்டும் என்பதை நினைவுபடுத் துவதாய் அமைகிறது. பிறரை வழிநடத்தும்போது சரியான பாதையில் வழிநடத்த, அறிவுரைதர, இடர்கட்கு ஞானம், தைரியமும் நிறையவே தேவைப்படு கின்றது. ஆகவே இந்த இரண்டாவது விரல் இதை நினைவுபடுத்தி நிற்கின்றது.

**நடுவிரல்**

இது கையில் நடுவிலும் நீளமானதாகவும் இருக்கும் விரல். இது நமது நாட்டுத் தலைவர்களுக்காகவும், வியாபாரிகளுக்காகவும் பலதரப்பட்ட தலைவர்களுக் காகவும் மன்றாடவேண்டும் என்பதையும் நினைவுபடுத்துவதாக உள்ளது. ஏனெனில் இவர்கள் நம் நாட்டை கட்டியெழுப்புபவர்களாக மக்கள் நலன் கருதி சட்டம் ஒழுங்குகளை அமுல்படுத்துபவர்களாக இருப்பதால் இறையருளும் வழிநடத்துதலும் மிகவும் தேவைப்படுபவர்களாக இருப்பவர்கள்.

**மோதிர விரல்**

நான்காவது அமைந்திருக்கும் இந்த விரல் மோதிரம் அணிவதால் மேன்மைப்படுத் தப்பட்டாலும் இது ஏனைய விரல்களுடன் ஒப்பிடும் போது பலவீனமானதாகக் காணப்படுகின்றது. இது நாம் செபிக்கும்போது பலவீனருக்காக செபிக்கவேண்டும் என்பதை நினைவுபடுத்துவதாக அமைகின்றது. பலவீனமானவர்களுக்காக நாம் எப்போதும் செபிக்க கடமைப்பட்டுள்ளோம்.

**சின்ன விரல்**

இறுதியானதாக காணப்படும் இவ்விரல், எம்மையும் பிறரையும் இறைவனோடு தொடர்புபடுத்துவதாக அமைகின்றது. தன்னைத் தாழ்த்துபவன் உயர்த்தப்படுவான் என்பதற்கமைய மிகச் சிறியதாக காணப்படும் இவ் விரலுக்கான கடமை மிகப் பெரியது. ஏனைய நான்கு விரல்களும் ஏனைய நான்கு விதமானோருக்காக செபிக்க நினைவுபடுத்துகின்ற போது இச் சிறிய விரல் மட்டும் நமக்காகவும் நாம் செபிக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்தி நிற்கின்றது.

எதற்காக யாருக்காக நாம் செபிக்க வேண்டும் என்றும், செபிக்கும் போது இரு கரம்கூப்பி ஏன் செபிக்க வேண்டும் என்றும் இப்பொழுது புரிகிறதா? இறைவன் எமக்கு தந்துள்ள இரு கரங்களையும் எமக்காகவும், பிறருக்காகவும் நன்மை செய்யவும், செபிப்பதற்காகவும் பயன்படுத்துவோம், பலன் பெறுவோம்.

ஆக்கம் : M.G. பிரதாப்,
தூய மரியாள் பேராலயம்,
திருகோணமலை

1ம் பக்கத் தொடர்ச்சி ☞

## 155வது விண்ணக பிறப்பு

என அன்றும், அமலமரித்தியாகிகள் (அ.ம.தி) என இன்றும் அன்பாக அழைக்கப்படும் இத் துறவறசபை யினர் இலங்கைத் திருச்சபையில் கடந்த 168 ஆண்டு களாக மேய்ப்புப்பணி-கல்விப்பணி-சமூகப்பணி-மனித நேயப்பணி எனப் பன்முகப்பட்ட பணிகளை ஆற்றிய பெருமையோடு தலை நிமிர்ந்த நிற்கின்றனர்.

**"ஏழைகளுக்கு நற்செய்தி நவில"**

சிறு வயதில் அவர் அனுபவித்த துன்ப வடுக்கள், அகதி வாழ்க்கை அவரை இயேசுவின் சிலுவையின் கண்ணோட்டத்தில் சிந்திக்கத் தூண்டியது. அக் காலத்தில் மக்களின் துன்பநிலை கண்டு அவர்க ளுக்கு வாழ்வு கொடுக்க இயேசுவின் நற்செய்தியின் ஒளியில் மக்களை ஒன்றினைகப் புறப்பட்டார். கடவுளுடைய மகிமைக்காகவும், திருச்சபையின் நன்மைக்காகவும், ஏழைமக்களின் நல்வாழ்வுக்காக வும் தன்னை அர்ப்பணித்த தூய இயூஜின் டி மெசனட் தன்னுடன் பயணிக்கக்கூடிய சில அருட்பணியாளர் களையும் இணைத்து அமலமரித் தியாகிகள் சபையை நிறுவினார். "ஏழைகளுக்கு நற்செய்தி நவில" என்னும் விருதுவாக்குடன் மறைபரப்புப்பணியை மகாஞானொ டுக்க மறையுரை மூலம் போதிப்பதையே தலையாய பணியாகக் கொண்டு பன்முகப்படுத்தப்பட்ட பணிக ளைச் சமய சமூக வரம்புகளைக் கடந்து மனிதம் என்ற பரந்த பாதையில் பணியாற்ற தானும் அழைக்கப்பட்ட குருக்களையும் பயிற்றுவித்தார்.

இறைவன் அழைப்பில் அவர் கொண்ட ஆழமான நம்பிக்கையாலும், மரியன்னை மட்டில் அவருக்கிருந்த பற்றுதலாலும் அமலமரித்தியாகிகள் சபை திருச்சபை யால் இனங்காணப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மிகவும் குறைந்த உறுப்பினர்களைக் கொண்டு தங்கள் பணியை ஆரம்பிக்கத் தொடங்கினாலும் **உலகனைத் திற்கும் இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும்** என்பதே இவரது விருது வாக்கு. இறைவனின் நற்செய்தி உலகமெங்கும் பரப்பப்படவேண்டும் என்ற இவரது கனவு ஈழமண்ணிலும் காலடி பதித்தது. ஆசியாவில் தம் பணியை ஆரம்பிக்கும் முதல் நாடாக இலங்கை காலித்துறை முகத்தில் 1847ல் கால்பதித்து யாழ் நோக்கி பயணித்தார்கள் அமலமரித்தியாகிகள். இவர்களைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் இருந்து பல நூற்றுக்கணக்கில் மறைபரப்புத் தாகத் தோடு ஈழ மண்ணை நோக்கி வருகை தந்தனர். தேவை எங்கோ சேவை அங்கே என்ற நோக்குடன் மறைபரப்புப் பணியாளர்களாகக் கடல் கடந்த பயணம் மேற் கொண்ட இந்த வெள்ளைக்கார சுவாமிமார் தம் தாய் தந்தை.உற்றார். உறவினர், சுற்றம் சூழல், சொந்த வீடு. தாய் நாடு என அனைத்தையும் துறந்து முன்பின் தெரியாத புதிய பணிக்களம் நோக்கி வந்தனர். புதிய மண், புதிய மக்கள், புதிய மொழி, புதிய கலாச்சாரம், புதிய கால நிலை, புதிய உணவு, புதிய வாழ்க்கைமுறை என அனைத்துமே புதிதாய் அமைந்தபோதும் அர்ப்பணிப்புமிக்க பணியை ஆற்றத்தொடங் கினர். வளங்களும் வசதிகளும் உள்ள பூமியில் இருந்து அடிப்படை வசதிகளே அற்ற பூமிக்கு வந்து அவர்கள் வாழ்ந்த தியாகவாழ்வும், கிறிஸ்தவத்திற்கு சான்று பகரும் அர்ப்பண வாழ்வும் மெச்சத்தக்கவை. சிலுவை அணிந்த அமலமரித் தியாகிகளின் வாழ்வும் பணியும் இயக்கம் பெறுவதற்கு பின்புலமாகவும் அவர்க ளது இதயத் துடிப்பாகவும் விளங்கியவர் தூய இயூஜின் டி மசெனட். அவர் எமது மண்ணையும் மக்களையும் மிகவும் அன்பு செய்த ஒரு புனி தராவார்.

இறுதியாக புனிதர் தம் வாழ்க்கையை எப்படி ஒரு சவாலாக வாழ்ந்து வெற்றி கண்டாரோ, அதே போல் புத்துணர்வுடன் சேவை புரியத் துணியும் ஒவ்வொருவரும் எம் வாழ்வை சவாலாக ஏற்று வெற்றிகாண்போமாக. அவர் தம் மாதிரிகையாலும் பரிந்துரையாலும் நம் வாழ்வை வளமாக்கிடவே இக்கட்டுரை நம்மை அழைக்கின்றது. வாழ்ந்து புனிதமாக்குவோம்.

"அடங்கிய ஆற்றலுடன் எரியும் திரிகள் எனக்கு வேண்டாம், என் சபைக்கும் வேண்டாம். நீங்கள் எரிய வேண்டும், கொழுந்து விட்டெரிய வேண்டும், சூடுதர வேண்டும், ஒளி கொடுக்க வேண்டும், அல்லது வெளியே செல்ல வேண்டும்"
- தூய இயூஜின் டி மசெனட்-

ஆக்கம்: - அருட்பணி. பி. ஜேக்கப் யோகராஜா அ.ம.தி.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்ததைவிட தற்போது பூமி ஒரு செல்சியஸ் டிகிரி அதிக வெப்பமாக உள்ளது என்றும் பூமியின் வெப்பநிலை மூன்று செல்சியஸ் டிகிரியை எட்டாதபடி தவிர்க்க, தேசிய அளவில், நாடுகள் எடுத்துள்ள திட்டங்கள் போதுமாதனாக இல்லை என்றும் ஐ.நா.வின் உலக வானிலை ஆய்வு நிறுவனம் எச்சரித்துள்ளது.

தகவல் - வத்திக்கான் வானொலி

## வாழ்வை வளமாக்குவோம்

அருட்பணி N.C. அருள்வரதன்

- நீதியின் பால் தாகமே
  கொண்டு வாழ்வில்
  நியாயத்தை நிலைநாட்ட
  முன்வருவோமே
  நீதியினைக்காணாது
  நிலைகுலைந்து
  நிர்க்கதியாய் நிற்கின்ற
  வாழ்வுகளை நிலைமாற்றி
  நியாயத்தைக் கண்டடைய
  நம்மால் முடிந்தவரை
  செயற்படுவோமே
- அநீதிகள் அதர்மங்கள்
  மேலோங்கும் போதினிலே
  உண்மைகள் மறைந்து கொள்ள
  உதிரங்கள் கொதித்தெழுமே
  அநீதிகளின் ஆர்ப்பரிப்பை
  அறிந்து அதை அடக்கிவிட்டு
  நீதிகளை உயிர்வாழ
  நிலைகொள்ளச் செய்வதற்கு
  தூய மனநிலைகளினால்
  துயர் நிலையை மாற்றுவோமே
- பேதங்கள் வேறுபாடு
  பாகுபாடு இவைகளினால்
  நீதியின் நிலைகளை நாம்
  நிச்சயமாய் காணமாட்டோம்
  அன்பை அடித்தளமாய்
  ஆணிவேராய்க் கொண்ட பெரும்
  விருட்சமாய் நின்று நாம்
  பணிசெய்யத்– துணியும்போது
  அப்பணியின் மேன்மைகளை
  அனைவருமே உணர்வார்களே
- தீமைகளை
  விட்டகன்று
  நன்மைகளைச் செய்துவர
  உண்மையில்
  அதன் மகிமை
  உயர்நிலைகள் காணுமே
  நன்மைகளைத் தேடியே
  நடைபோடும் போது வாழ்வு
  உண்மையின் வடிவங்களால்
  ஓங்கியவை வளம் பெறுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற மாத தொடர்ச்சி......

## தூய தமிழ் தந்த இத்தாலியரான

## யோசப் பெஸ்கி வீரமாமுனியானார்

அல்லாமலும் பிறமொழியாளர்கள் பலரும் தேன் மொழியாம் செந்தமிழைக் கற்றுணர ஏற்றதாக தமிழ் - இலத்தீன், தமிழ் - போர்த்துக்கேயம் என்றெல்லாம் அகராதிகளைத் தொகுத்து எமது மொழியின் மகத்துவத்தை உலகறியச் செய்த இத்தாலியர் ஒர் உன்னதமான மறுமலர்ச்சியாளராவார்.

**குறியீடுகளை உதவினார்**

எமது மொழி அன்று துவக்கமும் முடிவும் அறிந்து கொள்ள முடியாத வகையில் சொற்களுக்கிடையே இடைவெளிகள் எதுவுமில்லாது, குறியீடுகள் எதுவுமே இல்லாது எழுதப்பட்டிருந்தது.

விஞ்ஞான உலகிலே வாழ்ந்துகொண்டிருக்கும் நாம், அன்றிருந்த அந்த எழுத்து முறையானது எவ்வளவு சங்கடமாக இருந்திருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இத்தகைய இடர்பாடுகளை அகற்றி கால், அரை, முக்கால், முற்று, என்கின்ற மாத்திரை முறையினை வேண்டிய இடங்களிலே புகுத்தினார். அத்தோடு சொற்களுக்குச் சொற்கள் இடைவெளி விட்டெழுதும் முறையினையும் எமக்களித்து சீரிய செந்தமிழ் உரைநடையினையும் உருவாக்கினார். மேலும் ஆச்சரியக்குறி, வினாக்குறி இன்னும் எமது மொழியிலே கையாளப்படுகின்ற பல்வேறு குறியீடுகளையும் அறிமுகப்படுத்தினார்.

**திருக்குறள் மொழிபெயர்ப்பு**

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான் புகழ் கொண்ட தமிழ் நாடு"**

என்கின்ற புகழ்பூத்த பாரதியாரின் கூற்றானது பெஸ்கியின் காலம் வரையும் தமிழ் நாட்டிலேயே மடங்கிக் கிடந்தது. தமிழும் தமிழனும் பெருமையுறும் வண்ணம் பொய்யா மொழியாம் தமிழ் மறையை முதன் முதலில் இலத்தீன் மொழியிலே மொழி பெயர்த்து தமிழின் இனிமையை அந்நியருக்கு அறியச் செய்த வரும் அவரே. ஏனைய மொழி பெயர்ப்புக்கள் இவரின் பின் வந்தவைகளேயாகும்.

**தனித்தமிழ் தந்தார்**

தமிழ் மொழியிலே மணிப்பிரலாபநடை கலந்திருந்த காலத்தே தான் பெஸ்கி அவர்கள் வந்தார். இந்த நடைமுறையினை பூரணமாகவே வெறுத்து ஒதுக்கினார். சிறந்த தமிழ் சொற்களை ஆக்கி தூய செந்தமிழ் நூல்களைச் செய்து வீறுகொண்ட தமிழை விருத்தியடையச் செய்தார்.

" சீர் கோடுகளைக் கூறுபவன் சீர்திருத்தவாதி அல்ல
அவற்றைப் போக்க வழி செய்பவனே சீர்திருத்தவாதி"

இந்த மேலான கூற்றுக்கமைவாக தான் எமது மொழிக்காக செய்து தந்த அத்தனை திருத்தங்களையும் தன்னால் உருவாக்கப்பட்ட வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதகமறிதல், லுத்தேரினத்தாரியல்பு, ஞானஉணர்தல், சிருச்சவை கணிதம், வாமன்கதை, பரமார்த்தகுரு கதை முதலாம் உரைநடை நூல்களிலும் தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை, கலிவெண்பா, அன்னையழுக்கல் அந்தாதி, கித்தேரியம்மான் அம்மானை, கருணாம்பரப்பதிகம் என்கின்ற காப்பியங்களிலும் பூரணமாகவே பயன்படுத்தி உள்ளமை பெருமைக்குரியனவாகும்.

இவை மட்டுமல்லாது தமிழ் மொழிக்கு வரம்பாக தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் என்கின்ற சிறந்த இலக்கண நூல்களைக்கூட உருவாக்கி இலக்கண வர்த்தகருமானார்.

இத்தகைய காரணங்களைக் கொண்டே இத்தாலியரான யோசப் பெஸ்கி அவர்களை தமிழ்மொழி வல்லவராக, சிறந்த சீர்திருத்தவாதியாக, மறுமலர்ச்சியாளனாக அன்றும் இன்றுங்கூட தமிழ் உலகம் கண்டுணர்ந்து கொண்டுள்ளது. வரலாற்றுப் புகழ் கொண்ட இவரின் காப்பியங்களில் ஒன்றான "இராமாயணத்துடன் ஒப்பிட்டுப் போற்றப்பட்டதுமல்லாது அவரின் பெயரையே **"வீரமா-முனி"** வராக்கி உயர்த்தியதோடல்லாது தமிழ் நாட்டிலே அவரின் உருவச்சிலைகூட உயர்த்தி வைக்கப்பட்டுள்ளது. அவரின் தொண்டு போற்றப்படுவதாக !

*அ. இராசேந்திரம்*
*ஓய்வுநிலை அதிபர்*
*மூதூர் - 07*

3ம் பக்கத் தொடர்ச்சி ........

தூய தோமா அக்குவினா வாழ்ந்த துறவற இல்லம் திடீரென தீப்பிடித்து எரிந்தபோது அவர் நற்கருணைப் பேழையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு **"ஆண்டவரே நாங்கள் வெந்து சாம்பலாகிக் கொண்டிருக் கிறோம்"** என்ற கத்தினார். என்ன ஆச்சரியம் தீ தானாக அணைந்தது. இது புதுமையல்லவா !

மானிட சமூகத்தில் இன்று பிடித்துள்ள **தன்னலத் தீ, தற்பெருமைத் தீ, காமத் தீ, காய்மகாரத் தீ, மண்ணாசைத் தீ, பொன்னாசைத் தீ, பொறாமைத் தீ** என்று எம் மத்தியில் உழன்று கொண்டிருக்கும் எத்தனையோ தீக்களை அணைக்கக் கூடிய ஆற்றல் மிகு அருள டையாளம் நற்கருணை.

நற்கருணை முக்காலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எவ்வாறெனில் நற்கருணைக் கொண்டாட்டத்தில் கிறிஸ்துவின் இறப்பும் உயிர்ப்பும் இறந்த காலத்தில் நினைவுகூரப்படுகின்றது. அதே மறைபொருள் நிகழ்காலத்தில் பிரசன்னமாகின்றது. அதில் நாம் அருளடையாள நிலையில் பங்கேற்கின்றோம். எதிர்காலத்தில் இறையாட்சியின் மாட்சிக்கு அன்பின் விருந்து (நற்கருணை) அச்சாரமாக உள்ளது.

"திருச்சபை என்பது நற்கருணையின் கொண்டாட்டம், நற்கருணை என்பது திருச்சபை. அவை ஒன்றுக் கொன்று பக்கத்தில் இருப்பவை அல்ல, அவை இரண்டும் ஒன்றே தான். அங்கிருந்து தான் எல்லாமே ஒளி வீசுகின்றன" என்று திருத்தந்தை 16வது பெனடிக் கருதினாலாக இருந்தபோது எழுதியது நினைவு கூரத்தக்கது. திருச்சபையின் எல்லா மகிமை நிறை செயல் களும், மறைப்பணிகளும் இரக்கச் செயல்களும், அன்புப்பணிகளும் திருவிருந்துக் கொண்டாட்ட த்தில் இருந்தே புறப்படுகின்றன. நற்கருணை யோ சிலுவை யிலிருந்து புறப்படுகின்றது.

இயேசுவின் சிலுவையில் தம்மையே பகிர்ந்த ளித்து முன்மாதிரிகை காட்டிச் சென்றதை நாமும் ஏற்று பசித்திருப்போருக்கு உணவளிப்போம், ஆடையற்றவருக்கு உடுத்த உதவுவோம், இல்லிடமற்றோருக்கு இடமளிப்போம், சாதி வேறுபாடுபாராது சரிசமமாக மதிப்போம், பகைவரை அன்பு செய்வோம், துன்புறுத்துவோரு க்காக செபிப்போம், துயருருவோருக்கு ஆறுத லாவோம், தனிப்பட்ட வாழ்வில், சமூக சூழலில் ஏற்படும் சவால்களைச் சந்திப்போம், நட்புக்கு இலக்கண மாவோம், நல்லுறவுகளை உருவாக் குவோம்.

நற்கருணை நமது உள்ளத்துக்கும் உடலுக் கும் ஆன்மாவுக்கும் நலம் தரும் அருமருந்தாக, அகமருந்தாக "அகாபே" (அன்பு) விருந்தாக அமையட்டும். ஆண்டவரின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழா, திரு முழுக்கினால் இறை வாக்கினரான எம் ஒவ்வொருவரின் வாழ்க்கை விழாவாக மாறட்டும்.

**"ஏழையாக வந்தார், கோழையாகவில்லை**
**அவர், பேழைக்குள் பெறுமதியானார்"**

*திருமதி. ம.ஜெயவதனி -ஆசிரியர்*
*செல்வநாயகபுரம்*

## திருச்சபையின் பிறந்த தினம்



இற்றைக்கு இரண்டாம் ஆண்டுகளுக்கு முன் இயேசுவின் பெயரில் பெந்தகோஸ்து நாளில் எமது தாய் திருச்சபை பிறந்தது. இந்த பெந்தகோஸ்து தினமானது கிறிஸ்தவர்கள் எமக்கு மிகவும் முக்கியமான தொரு நாளாகின்றது. தூய ஆவியின் வருகையோடு திருச்சபை பல வீனர்களான மனிதர்களோடு, இறைமகனாம் கிறிஸ்துவை தலையாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்து தம் வாழ்நாளில் பன்னிரெண்டு திருத்தூதர்களை, பல சீடர்களை தன்னுடன் கொண்டிருந்தாலும் திருச்சபை எனும் ஒரு திருக்கூட்டம் ஆரம்பமானது என்னவோ தூய ஆவியின் வருகையான பெந்தகோ ஸ்து நாளில் தான். பெந்தகோஸ்து என்பது ஐம்பதாவது நாளைக் குறிக்கும். இது யூதர்களின் முக்கிய திரு நாட்களில் ஒன்று. ஆரம்பகாலத்தில் இஸ்ரயேலர் மத்தியில் இது அறுவடையின் திருநாளாக இருந்தது. இத்திருநாள் காலப்போக்கில் இறைவன் தம்மை தனது சொந்த அரச, குருத்துவ இறைகுலமாக தேர்ந் தெடுக்க செய்துகொண்ட சீனாய் உடன்படிக்கைக்கு முன்னராக மோசேயிடம் இஸ்ரயேலர் கடைபிடிக்க வேண்டிய கட்டளைகள் கொடுக்கப்பட்டதை நினைவுகூரும் திருநாளாக கொண்டாடினர். அறுவடையின் திருநாள் (ஜம்பதாவது), மோசே இறைவனிடம் இருந்து சீனாய் மலையில் கட்டளைகளை பெற்றுக் கொண்ட திருநா-ளாக மாறியது.

பாஸ்கா திருநாளிற்காக, ஜெருசலேம் தேவாலயத்திற்கு அநேக யூதர்கள் வருவது வழக்கம். அதேபோல வே இத்திருநாளையும் கொண்டாடவென பல இடங்களில் இருந்தும் வந்த யூதர் ஜெருசலேமிலேயே தங்கி செல்வது வழக்கம். இத் திருவிழாவிற்காக பலஸ்தீனம் முழுவதிலிமிருந்தும் (எபிரேயம், அரமேயம் பேசு வோர்), பலஸ்தீனத்திற்கு வெளியிலிருந்த கிரேக்கம் மொழிபேசும் யூதரும் (மத்தியதரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளிலிருந்து), யாத்திரிகர்களாக எருசலேமிற்கு வந்திருந்தனர்.

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து தாம் பெற்ற விடுதலையைக் கொண்டாட யூதப் பாஸ்காப் பண்டிகை ஆண்டு தோறும் எருசலேமில் கொண்டாடப்பட்டு வந்தது. இவ்விழாவிற்காக அநேக யூதர் எருலேமிற்கு வழமைபோல வந்திருந்தனர். இப்பாஸ்கா பண்டிகைக்காக ஒரு வயது நிரம்பிய மாசற்ற செம்மறி பலியிடப் படுவது வழக்கம். ஆனால் இயேசு தனது இறுதிப் பாஸ்கா விழாவின்போது அவ்வாறு செய்யாமல், தன்னைத் தானே மனிதர் எமது பாவங்களுக்கு கழுவாயாக பலியிட்டு மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்க சித்த மானார். எனவே தனது பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் புதிய பாஸ்காவாக மாறி மனுக்குலத்திற்கு விடுத லையைக் கொணர்ந்தார். இதன் பின்னரே சீனாய் மலையில் தனது கட்டளைகளைக் கொடுத்து எபிரேய ரை தனது சொந்த இனமாக்கிய இறைவன், இயேசுவால் மீட்கப்பட்டோர் தம் சொந்த பிள்ளைகளாக விடு தலை வாழ்வு வாழ இயேசு பாடுகள் பட்டு மரணித்து, உயிர்த்த அதே ஜம்பதாவது நாளில் (யூதப்பண்டிகை அன்று) தனது தூய ஆவியை இறைவனின் புதிய இஸ்ரயேலருக்கு கொடுக்கின்றார்(காலர்தியர் 6:16).

இந்தத் திருநாளில் தான் திருமுழுக்குயோவான் கூறியது போல் "நானோ உங்களுக்கு நீரினால் திருமுழு க்கு கொடுக்கின்றேன். ஆனால் எனக்குப்பின் வரவிருக்கின்றவரோ தூய ஆவியினாலும் நெருப்பினாலும் திருமுழுக்கு அளிப்பார்" (லூக் 3:16) பெந்தகோஸ்து திருநாளன்று, தூய ஆவியின் வருகையின் போது நெருப்பினால் இயேசுவின் சீடர்கள் திருமுழுக்கு பெற்றார்கள். தந்தையாம் இறைவன் தனது ஒரே மகனின் ஆவியை இவர்கள் மீது அனுப்பிய நாளில் திருச்சபை ஆரம்பமானது பெந்தகோஸ்து தினத்தில் ஆரம்பமாகிய திருச்சபையானது மனிதர்களைக்கொண்ட கூட்டமாக இருந்தாலும் அது இயேசுவை தலை யாகக் கொண்டு தூயஆவியின் அபிஷேகத்தால் ஆரம்பிக்கப்பட்டதின் இது தூய்மையானதாக காணப்படுகின்றது. இது மனிதவேலைப்பாடு அல்ல மாறாக இறைவனின் கைவண்ணம். பலவீனரைக் கொண்ட ஆனால் பரிசுத்த திருக்கூட்டம். இது இறைவனே தொடங்கிய திருச்சபை இத்திருச்சபையானது பெந்தகோஸ்து திருநாளில் தான் பிறந்ததென்பதற்கு அன்று அங்கிருந்த பன்னாட்டவரும் சாட்சிகளாயிருந்தனர். அவர்களின் சாட்சியத்தின் மொத்த வடிவம் தான், இவர்களில் பலர் இறைமகன் கிறிஸ்துமீது கொண்ட நம்பிக்கையும், பின்னர் தம் நாடு திரும்பியதும் தாம் கொண்ட விசுவாசத்தை ஏனையோருக்கும் பறை சாற்றியதும் திருச்சபையின் பிறந்தநாள் நாம் வாழ்வுபெற இறைவன் தந்த இனிய நாள்.

ஆக்கம் : அருட்சகோ. இ.யோகா Scjm
இரத்தினபுரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் ஆண்டு சிறப்புப் போட்டி

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி



01. இப்படம் குறிக்கும் சம்பவம் எது?
.....................................................................

02. திருவிவிலியத்தில் காணப்படும் நூல்?
.....................................................................

03. அதிகாரம் வசனம் என்ன?
.....................................................................

04. இச்சம்பவத்தோடு தொடர்படையவைகள் 4 எழுதுக?
.....................................................................
.....................................................................

பெயர் : .....................................................

முகவரி : .....................................................
.....................................................

பங்கு : .....................................................

தரம் : .....................................................

### இப்போட்டிக்கான விதிமுறைகள்

01. பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கானது.
02. **திருமலைத்தீபத்தில்** தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
03. அதில் தரப்படும் கேள்விகளுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
04. 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.
    1ம் பரிசு 500/= ரூபா, 2ம் பரிசு 300/= ரூபா, 3ம் பரிசு 200/= ரூபா
05. முடிவுத்திகதி : 10-06-2016
06. அனுப்பவேண்டிய முகவரி : இரக்கத்தின் ஆண்டு சிறப்புப் போட்டி
    ஆசிரியர்,
    திருமலைதீபம்,
    இல : 297, டொக்கியாட் வீதி,
    திருகோணமலை.

## சிறுகதைப் போட்டி

01. தலைப்பு இரக்கத்தின் ஆண்டை மையப்படுத்தியதாக அமையவேண்டும்.
02. Fullscap பேப்பரில் 3 பக்கங்களை கொண்டதாக அமையவேண்டும்.
03. தட்டச்சுப்பண்ணியோ, கையெழுத்துப் பிரதியாகவோ இருக்கவேண்டும்.
04. சொந்த ஆக்கமாக இருக்கவேண்டும்.
05. தழுவல் மற்றும் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.
06. இப்போட்டிக்கு வயது எல்லை இல்லை.
07. உங்களது பெயர் முகவரி பங்கு ஆகியவற்றை தெளிவாக வேறொரு தாளில் எழுதி சிறுகதையுடன் இணைத்து அனுப்பவும்.
08. தரமான சிறுகதைகளுக்கு 1ம், 2ம், 3ம் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை ஒவ்வொன்றுக்கும் முறையே 1ம் பரிசு 2000/= ரூபா, 2ம் பரிசு 1500/= ரூபா, 3ம் பரிசு 1000/= ரூபா
09. 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெறும் சிறுகதைகள் திருமலைதீபத்தில் பிரசுரிக்கப்படும்
10. முடிவுத்திகதி : 10-06-2016
11. அனுப்பவேண்டிய முகவரி : இரக்கத்தின ஆண்டு சிறப்புப் போட்டி
    ஆசிரியர்,
    திருமலைதீபம்,
    இல : 297, டொக்கியாட் வீதி,
    திருகோணமலை.

### முத்துவிழா நாயகனை வாழ்த்துகிறேன்

பனிமலை பொழியும் மார்கழி மாதக் குளிரில்
மாட்டுத் தொழுவம் தனில் கிறிஸ்து பிறந்தார்
பிறந்தீர் கிறிஸ்துவின் ஜனன தேதியில்
வளர்ந்தீர் திருமலை மண்ணில்


தாய் தந்தையின் சிறந்த வழிகாட்டல் வளர்ப்பும்
உம்மீது அவர்கள் காட்டிய அக்கறையும்
உமது வாழ்வில் பல வெற்றிகளை அடைய
இறையாசீர் என்றும் பொழியட்டும்

கிறிஸ்துவ பயிற்சிக் கல்லூரியை நோக்கிய பயணமும்
பலன் கருதா பணி செய்யும் மகத்துவமும்
பங்குகளை வளப்படுத்தும் திறனும் - நீர்
குருத்துவ வாழ்வின் முத்துவிழாவை கொண்டாட அழைத்தது

இறை சேவையில் முப்பது வருட நிறைவை
கூறவார்த்தைகள் ஏது- எத்தனையோ
மாணவர்களின் எதிர்காலக் கனவை
நனவாக்கிய பெருமை உம்மையே சாரும்

புனிதமான குருத்துவ வாழ்க்கைப் பயணத்தில்
பல குருத்துவ விழாவைக் கொண்டாடினாலும்
உம்பணி என்றும் தொடர்ந்திட முத்துவிழா நாயகனே
உளமார இதமாக வாழ்த்தி நிற்கின்றோம்.

ஆக்கம் : செல்வி. எம்.அடலீனா
புனித மரியாள் பேராலயம்,
திருகோணமலை.-




### வெற்றியைக் காணவே Fr. N.C.

- ஆறுவரிக்கவிதை
- மாறியுள்ள வரிகளை சரிசெய்யுங்கள்
- எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
- குலுக்கல் மூலம் தெரிவு
- **1ம் பரிசு 500/= ரூபா**
- **2ம் பரிசு 300/= ரூபா**
- **3ம் பரிசு 200/= ரூபா**

**இதோ கவிதை வரிகள்**

- *உண்மையும் நேர்மையும் வாழ்வோடு*
- *தீமைகள் நிறைந்த வாழ்வுகளால்*
- *இணையும் போது வாழ்வினிலே*
- *தூய்மைகள் மறைவது உண்மையே ஆனால்*
- *உயர்வின் மகிமைகளைக் கண்டு கொண்டே*
- *உண்மையின் வெற்றிகளைக் காண்போமே.*

- சரியாக வடிவமையுங்கள்
- அம்புக்குறியீட்டுக் காட்டினால் போட்டியிலிருந்து நீக்கப்படும்.
- தனியான தாளிலே வடிவமையுங்கள்
- வெற்றிபெறுங்கள்
- முடிவுத்திகதி 31-05-2016
- அனுப்பவேண்டிய முகவரி : **"வெற்றியைக் காணவே"** (கவிதைப்போட்டி)
  திருமலைதீபம்
  இல: 297, டொக்கியாட் வீதி,
  திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 17
## திருத்தூதர் பணி அதி 17 - 20 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ள் | ஏ | ழு | மை | ந் | த | ர் | க | ள் | |
| க | | மி | த் | தி | லே | ன் | | சி | ல் |
| ய் | சொ | | ப | னை | | ஊ | கு | றை | ளி |
| நா | ல் | லை | ல | த | ம் | ழி | ழ | வா | க |
| ஒ | வ | த | க | வே | ச | ய | ப் | ழ் | ளி |
| ய | ன் | டு | ணி | | ச் | ம் | ப | வு | வெ |
| டி | மை | வி | | | அ | | ம் | ம் | தை |
| கொ | | சு | கா | க் | ளி | ள் | வெ | | ந் |
| | க | ப் | ப | லே | றி | னா | ர் | | ச |
| தி | ரு | க் | கோ | வி | ல் | க | ளி | ல் | |

01. சந்தை வெளிகளில்
02. குழப்பம்
03. சொல்வன்மை
04. திருக்கோவில்களில்
05. கப்பலேறினார்
06. ஏழுமைந்தர்கள்
07. வெள்ளிக்காசு
08. பலகணி
09. மித்திலேன்
10. சிறைவாழ்வும்
11. ஊழியம்
12. விடுதலை
13. அச்சம்
14. வேதனை
15. கொடிய ஓநாய்கள்

## இறை இரக்கம்

பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்
இறை வார்த்தையுடன் உதயமாகினார்
இரக்கத்தின் ஆண்டாம் இவ் ஆண்டை
திருத்தந்தை அவர்கள்
ஆண்டில் மட்டும் பெயர்
ஆண்டவன் பிள்ளைகள் எம்மிடம்...?
இரக்கம் வேண்டும் எங்கே?
உருவாக்குவோம் எம்மில்
உரமாகுவோம் பிறருக்கு
ஆபத்தில் இருக்கும் அயலானிடம்
காட்டும் அனபிலோர் இரக்கம்
அலறித்துடிக்கும் அடுத்தவனுக்கு
உதவுவதிலோர் இரக்கம்
வீதியில் திரியும் மாறுத்திறனாளிகளிலோர் இரக்கம்
வறுமைக் கோட்டில் வெறுமையாய் நிற்போரிலோர் இரக்கம்
இவை மட்டுமே இரக்கம் என எண்ணிவிடாதீர் தவறாய்
ஆறறிவு கொண்டோர் மட்டுமல்ல
அதன் கீழ்உள்ளவையும் உயிர்களேயென
உணர்ந்து உதவுவதுமேரிரக்கம்
அத்துடன் நின்றுவிடவில்லை இரக்கம்
இரக்கத்தின் உண்மைகள் கற்றுத்தரும் பாடங்கள்
ஒவ்வொன்றும் இரக்கமே
நாமும் பெறுவோம் இறைஇரக்கத்தை
எத்தனை நற்பண்புகள் உள்ளதோ
அத்தனைஇருக்குமுள்ளத்திலும்
இருப்பார் இறைவன் இறை இரக்கமாக

ஆக்கம் : திருமதி கியூரி ரீகன் - இந்தியா

## செல்வநாயகபுரம் தூய வனத்து அந்தோனியார் ஆலயத்தில் வளர்ந்தோருக்கான மறைக்கல்வி

கடந்த 10.04.2016 அன்று மாலை 5.00 மணியளவில் தூய வனத்து அந்தோனியார் ஆலயத்தில் வளர்ந்தோருக்கான மறைக்கல்வி அருட்தந்தை சீ.றோ. ஜெயரட்ணம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடநெறியில் 25க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள். ஒரு வருட கால பயிற்சித்திட்டமாக இப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் பாடநெறியின் இறதியில் பரீட்சை நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் : யூ.ஆன் றெமோனா
செயலாளர்
கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்

## மறைக்கல்வி கற்போம்-15

**01. தூய ஆவியானவரின் கனிகள் எவை?**
பரம அன்பு/ மகிழ்ச்சி/ அமைதி/ பொறுமை/ இரக்கம்/ நன்னயம்/ சகிப்பு/ சாந்தம்/ விசுவாசம்/ அடக்க ஒடுக்கம்/ இச்சையடக்கம்/ நிறைகற்பு.

**02. மரியாள் யார்?**
மனுவுரு கொண்ட தம் திருமகன் ஆண்டவர் இயேசுவின் தாயாக இருக்கும்படி இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மாசற்ற கன்னியே.

**03. இறைவனின் அன்னை என்றால் பொருள் என்ன?**
இறை அன்னை என்ற பதம் இறை சித்தத்தை ஏற்ற மரியாள் தூய ஆவியானவரின் அருளினால் கருவுற்று இறைமகனின் தாயார் ஆகியமையே.

**04. என்றுமே கன்னியாக இருந்தார் என்பதன் பொருள் என்ன?**
அவர் இறக்கும் வரை கன்னியாகவே இருந்தார்.

**05. அமல மரித் தியாகிகள் சபை உருவாகி (2016ல்) தற்போது எத்தனை ஆண்டுகள்?**
200 ஆண்டுகள்.

**06. ஞாயிற்றுக் கிழமையின் சிறப்பு அம்சங்கள் எவை?**
கடவுளின் நாள், கிறிஸ்துவின் நாள், திருச்சபையின் நாள், மனிதனின் நாள்.

**07. கடவுளின் நாள் என்றால் என்ன?**
படைப்பின் நாள்

**08. கிறிஸ்துவின் நாள் என்றால் என்ன?**
உயிர்ப்பின் நாள்



**09. திருச்சபையின் நாள் என்றால் என்ன?**
நற்கருணையின் நாள்

**10. மனிதனின் நாள் என்றால் என்ன?**
மகிழ்ச்சியின் நாள் , ஓய்வின் நாள்

## இது இரக்கத்தின் காலம்
## வாழ்வின் இறுதியில் உடன் வருவது எது?

ஒரு நாள் ஒரு மனிதர் தான் இறந்து விட்டதை உணர்ந்தபோது, கையில் ஒரு பெட்டியுடன் கடவுள் அவர் அருகில் வந்தார். வா மகனே... நாம் கிளம்புவதற்கான நேரம் நெருங்கி விட்டது என்றார். வியப்படைந்த அந்த மனிதர், "உடனடியாகவா?, இவ்வளவு விரைவாகவா?, என்னுடைய திட்டங்கள் என்ன ஆவது?' என்றார். மன்னித்துவிடு மகனே... என்னை அழைத்துச் செல்வதற்கான நேரம் இது என்றார் கடவுள் சரி, அந்தப் பெட்டியில் என்ன உள்ளது? என்றார் மனிதர். "உன்னுடைய உடைமைகள் ..." என்று கடவுள் சொன்னதும், என்னுடைய பொருட்கள், உடைகள், பணம் இவையா? இல்லை, அவை பூமியில் நீ வாழ்வதற்கு தேவையான உடைமைகள் என்றார் கடவுள். " எனது நினைவுகளா என்று அவர் கேட்டதும் நிச்சயமாக அவை உன்னுடையவை இல்லை. அவை காலத்தின் கோலம்" என்றார் கடவுள். என்னுடைய திறமைகளா? " என்றதும், அவையும் கண்டிப்பாக உன்னுடையவை இல்லை, அவை சூழ்நிலைகளுடன் சம்மந்தப்பட்டவை, அப்படி என்றால் என்னுடைய குடும்பமும் நண்பர்களுமா? என்று அவர் கேட்டதும் "மன்னிக்கவும் மகனே, குடும்பமும் நண்பர்களும் நீ வாழ்வதற்கான வழி என்றார் கடவுள். அப்படி என்றால் என் மனைவி மற்றும் மக்கள் என்று அவர் கேட்க " உன் மனைவியும் மக்களும் உனக்கு உரியவர்கள் இல்லை அவர்கள் என் உன் இதயத்துடன் தொடர்புடையவை என்றார் கடவுள். என் உடல்? என்று அவர் கேட்க, அதுவும் உன்னுடையது கிடையாது, உடலும் குப்பையும் ஒன்று..." என்றார் கடவுள். என் ஆன்மா? " இல்லை, அது எனக்குரியது என்றார் கடவுள். மிகுந்த அச்சத்துடன் அந்த மனிதர், கடவுளிடமிருந்து அந்த பெட்டியை வாங்கித் திறந்தார். காலிப்பெட்டியைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார் கண்ணில் நீர் வழிய கடவுளிடம் "என்னுடையது என்று எதுவும் இல்லையா என அவர் கேட்க, கடவுள் சொன்னார் அதுதான் உண்மை. நீ வாழும் ஒவ்வொரு நொடி மட்டுமே உன்னுடையது. வாழ்க்கை என்பது நீ கடக்கும் ஒரு நொடி தான். ஒவ்வொரு நொடியையும் மகிழ்வாக வாழ்வதுடன் நல்ல செயல்களை மட்டும் செய். எல்லாமே உன்னுடையது என்று நீ நினைக்காதே உன் வாழ்க்கையை வாழ். மகிழ்ச்சியாக வாழ மறக்காதே. அது மட்டுமே நிரந்தரம். **உன் இறுதிக்காலத்தில் நீ எதையும் உன்னுடன் கொண்டு போக முடியாது.** இது இரக்கத்தின் காலம்.

ஆதாரம் - வத்திக்கான் வானொலி

## ஆணிக்குகள்

@ உடல் அளவிலும், ஆன்மீக அளவிலும் நாம் இரக்கத்தின் செயல்களில் ஈடுபடும் வேளையில் நாம் வாழும் நற்செய்திகளாக மாறுகிறோம்.

@ இறைவனையும், மனிதரையும் இணைக்கும் பாலம், இரக்கம்.

@ தூய ஆவியாரின் உதவியின்றி, நம்மால் சான்று பகர முடியாது. உண்மையான சான்று வழங்குவதன் வழியாக, கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வைச் சரியான பாதையில் அமைக்கின்றார்கள்.

@ இயேசுவைப் பின் செல்லும் போது, பிறரின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்ற விளம்பர நோக்கத்தைக் கொண்டு செயற்படுபவர்களை, கிறிஸ்தவ வாழ்வு முறை சகித்துக்கொள்ளாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எகெட் கரித்தாஸ் நிறுவனத்தில்

## தூய லூர்து அன்னையின் திருச்சுரூப ஸ்தாபிப்பும் கெபியைப் புனிதப்படுத்தலும்.





எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி க.நிதிதாசன் மற்றும் அவ் நிறுவனத்தின் பணியாளர்களின் முயற்சியினால் தூய லூர்து அன்னையின் திரு சுரூபம் எகெட் கரித்தாஸ் பணிமனையில் ஸ்தாபிக்கப்பட்டது. இந் நிகழ்வு 11.04.2016 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

# திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தினரின் கருத்தரங்கும்

## ஆயருடனான சந்திப்பும்





திருகோணமலை மறைமாவட்ட கிறஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்களுக்கான அரை நாள் கருத்தரங்கு 21.04.2016 ம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு திருக்கோணமலை இயேசு சபை இல்லத்தில் அருட்பணி . ஜே. அனிஸ்ரன் மொறாயஸ் இ.ச அவர்களின் வழிநடத்தலின் கீழ் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் உவர்மலை பங்கு உதவிப் பங்குத்தந்தை அருட்பணி அலக்ஸ் மரிய செல்லையா ( கப்புச்சீன் சபை ) அவர்கள் உண்மை, நம்பிக்கை போன்ற தலைப்புக்களில் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். இக்கருத்தரங்கில் தற்போது கிறிஸ்தவ வாழ்வு சமூகம் இயங்கிக் கொண்டிருக்கும் பேராலயம் ,குவாடலூப்பே, செல்வநாயகபுரம் , இறையிரக்க பங்குகளைச் சேர்ந்த 40பேர் பங்கு பற்றினர். இதன் பின்னர் 11.45 மணியளவில் திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூக நிர்வாக உறுப்பினர்கள் அவர்களது ஆன்மீக இயக்குனராக தற்போது பணியாற்றும் அருட்பணி .ஜே. அனிஸ்ரன் மொறாயஸ் இ.ச அடிகளாருடன் ஆயர் அவர்களை ஆயர் இல்லத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பில் திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் தற்போதய செயற்பாடுகள் தொடர்பாகவும் எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் பங்குகள் ரீதியாக ஆயருக்கு விளக்கமளிக்கப்பட்டது. இதில் ஆயர் அவர்கள் ஆன்மீக ரீதியிலும் ,சமூகப் பணியிலும் கிறிஸ்தவ வாழ்வு சமூகம் சிறப்பாக இயங்க தனது ஆலோசனைகளை வழங்கியதுடன் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

*தகவல் : ச.அன்ரனிதாஸ்*
*திருகோணமலை மறைமாவட்ட கி.வா.ச*

# 41ம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1973 - 04 - 29 |  | 2016 - 03 - 27 |

## திருமதி. ஜேக்கப் நவரஞ்சலி

மங்கையே மகத்தான உம் பணிகளால்
மறைந்தாலும் மனங்களில் ஒளியானாய்
விழிகளில் வழிந்திடும் துளிகளில்
நீ ஒரு துகலானாய்

இவ்வையகம் விட்டு நீ பிரிந்தாலும்
உம் அன்பு மாறாத பொக்கிசமானது.
இறப்பு மனிதனின் கடைசி நிலை
உம் வாழ்வு எல்லையில்லா பேரின்ப நிலை

பிரிவு எம்மை தாக்கினாலும்
இறை சங்கமத்தில் உம் வாழ்வை
யாசிக்கின்றோம்.



**துயருடன் மறையாசிரியர் ஒன்றியம் சாம்பல்தீவு பங்கு திருமலை தீபமும் தங்களது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றது.**

## பங்குகளின் பெரிய வெள்ளி நன்கொடை விபரம்

| இல | பங்கு | தொகை |
|---|---|---|
| 01 | தூய லூர்து அன்னை, பாலையூற்று | 58,820.00 |
| 02 | குழந்தை இயேசு, உவர்மலை | 21,110.00 |
| 03 | தூய மரியாள் பேராலயம் | 20,000.00 |
| 04 | தூய குவாடலூப்பே, சின்னக்கடை | 16,060.00 |
| 05 | தூய அந்தோனியார், மூதூர் | 12,000.00 |
| 06 | இறை இரக்கம், அலஸ்தோட்டம் | 10,000.00 |
| 07 | திரு இருதய ஆண்டவர், இருதயபுரம், மூதூர் | 10,000.00 |
| 08 | தூய திருமுழுக்குயோவான், சாம்பல்தீவு | 7,700.00 |
| 09 | தூய சதா சகாய மாதா | 4,400.00 |
| 10 | தம்பலகாமம் | 4,000.00 |
| 11 | தூய அந்தோனியார், சீனன்குடா | 2,500.00 |
| 12 | கடற் படைத்தளம் (அருட்பணி லக்ஸ்மன் இ.ச) | 1,900.00 |
| 13 | தூய செபமாலை மாதா, குச்சவெளி | 1,250.00 |
| 14 | தூய கிறிஸ்து அரசர், கன்னியா | 1000.00 |
| 15 | தூய சூசையப்பர், நிலாவெளி | |
| | முழுத்தொகை | 1,70,740.00 |

*தகவல் : அருட்பணி. அன்டு ஸ்ரீபன் - நிதிப் பொறுப்பாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org